Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசு௵ மார்கழி – தை மீ டிசம்பர் 1965 & ஜனவரி 1966	பகுதி 9 & 10

MEMBERS OF THE EDITORIAL BOARD

1. SRI A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY, M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 ந.ப.

பொருளடக்கம்

1. தலையங்கம் ... 161
2. ஆசிரியப்பணி அன்புப்பணி ... 163
3. கோவை வட்டத் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் யூனியன், கோயமுத்தூர் ... 164
4. கற்புத் தீ ... 165
5. ஆசிரியர்களின் சேமநல நிதி, தமிழக அரசின் புதுத்திட்டம் ... 170
6. இராம காதை, நதி பிறந்த கதை ... 171
7. அரசாணை M. S. No. 1762 கல்வி, நிதி இலாகா, நினைவுக் குறிப்பு 129254=FR/64-4 ... 173
8. பாறைகள் ... 174
9. ஆசிரியர் ஒற்றுமைக் கழகத்தின் விண்ணப்பம் ... 177
10. கல்வி எதிரொலி (Education Echo) ... 178

Printed by Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and Published by Sri L. Mariapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

பாலர் கல்வி

தொகுதி 30 | விசுவாவசு ஸு மார்கழி—தை மீ டிசம்பர் 1965 & ஜனவரி 1966 | பகுதி 9 & 10

அவருக்குச் செய்யும் கைம்மாறு

உருவத்தால் சிறியவராகவும், உள்ளத்தால் பெரியவராகவும் திகழ்ந்த லால்பகதூர் சாத்திரி யவர்கள் இறந்த கால மனிதராகி விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் பாரதம் புலம்பிற்று ; ஏன், பாரகமே கலங்கிற்று. சாத்திரியாரின் மறைவு எல்லோருக்கும் திகைப்பையும், அதிர்ச்சியையும் தந்தது. ஆசிரியர்களாகிய நாமும் அவர் தம் மறைவு குறித்து வருந்துகிறேம் ; இரங்குகிறேம்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகனு கப் பிறந்த அவர், இமயம் முதல் குமரி வரை விரிந்தும், பரந்தும் இருக்கும் பழம் பெரும் பார தத்தை ஆளும் முதல்வராகி, இந்தியா பாகிஸ்தான் போரில் வெற்றி வீரராகி, இவ்விரு நாடுகளிடையே அமைதியை நிலை நாட்டத் தாஷ்கண்ட் சென்று அமைதியுற்ருர் என்பதை நினைக்குந்தோறும் நினைக் குந்தோறும் எந்த நெஞ்சத்தான் வருந்தாது ; கலங் காது.

கையில் காசில்லாத காரணத்தால், தலையில் புத்தகங்களைக் கட்டிக் கொண்டு கங்கையைக் கடந்த அவர்—மாதம் 2½ ரூபாயில், ஒரு வேளை உணவுண்டு, வாழ்க்கை நடத்திய அவர்–1923 ல் திருமதி லலிதா தேவியை மணந்து கொண்ட தால், சர்க்கா ஒன்றும், கதர்த்துணி சில கசங் களும் பெண் வழிச் சீராகப் பெற்றுக் கொண்ட அவர்—தேர்வு எழுத மூன்று திங்களே இருந்த போதிலும், நலம் நாடும் நல்லோர் பலரின் அறி வுரையையும் பொருட் படுத்தாமல் ஒத்துழை யாமை இயக்கத்தில் பங்கு கொண்ட அவர்— அன்றும் ஏழையாக இருந்தார் ; இன்றும் ஏழை யாகவே இறந்தார்.

லாலா லஜ்பத் ரர்ய் அவர்களின் தொடர்பால், மக்கள் ஊழியர்ச் சங்கத்தில், (Servants of the people Society) உறுப்பினராகச் சேர்ந்த சாத்திரி யவர்கள் தாம் பதவியில் இருந்த போதெல்லாம் தமது சம்பளத்தின் ஒரு பகுதியைத் தவருமல் அச்சங்கத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனால், அவர் பதவியில் இல்லாத போதெல்லாம் அதே சங்கம் அவருக்கு மாதந்தோறும் 250 ரூபாய்கள் வழங்கியது. அவர் வகித்த பதவிகள் பல. நினைத் திருந்தால், அவர் தமக்கென்றும், தமது குடும்பத் திற்கென்றும் குன்றுபோல் செல்வம் குவித்திருக்க லாம். ஆனால், அப்படிச் செய்யவில்லை. அது வன்றே நேர்மை. அதுவன்றே உண்மை ஊழி யம். இதனை வியவாதார் யாரே ?

அரியலூர் இரயில் விபத்துக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர் தமது அமைச்சர் பதவி யைத் துறந்தார் ; அப்போதே அரசாங்கக் காரில் ஏற மறுத்தார் ; பேருந்து வண்டியில் ஏறித் தமதில்லஞ் சென்றார். 1961-ல் அகத்துறை அமைச்சராக இருந்த போது, பட்டந்தாணுப் பிள்ளையைப் பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநராக நிய மித்ததின் மூலம் கேரளச் சிக்கலைத் தீர்த்து வைத் தார். இந்தியா துண்டு துண்டாகச் சிந்திச் சிதறிப் போவதை விரும்பாத அவர் பிரிவினைத் தடுப்புச் சட்டம் கொண்டு வந்தார். நேபாளத் திற்கும் நமக்கும் ஊனமுற்றிருந்த உறவை ஊன மற்ற உறவாக மாற்றிய பெருமை அவரையே சாரும். இந்தியாவும், பாகிஸ்தானும் தாஷ்கண் டில் சேர்ந்து வெளியிட்ட பிரகடனம் அவர்தம் அரசியல் திறமைக்கோர் எடுத்துக் காட்டாகும். இவ்வாறு நமக்காக, நம் நாட்டிற்காகத் தொண்டு புரிந்தவருக்கு நாம் செய்ய வேண்டிய கைம்மாறு யாது ?

ஏழைகளின் தோழராக இருப்போம் ; சமதருமச் சமுதாயத்தை நிறுவவும், இந்திய ஒற்றுமையை நிலை நாட்டவும் பாடு படுவோம். யாவற்றிற்கும் மேலாக நேர்மையோடு கூடிய திறமை மிக்கவ ராகத் திகழ்வோமாக. ★

அனைத்திந்தியக் கல்வி மாநாடு

அனைத்திந்தியக் கல்விச் சங்கங்களின் கூட்டிணைப்பும், அனைத்திந்திய இடைத்தர ஆசிரியர்ச் சங்கமும் தங்கள் தங்கள் மாநாடுகளை இத்திங்கள் இறுதி வாரத்தில், முறையே அலகாபாத்திலும், பாட்னாவிலும் நடத்தின முன்னது பேராசிரியர் சர்மா அவர்கள் தலைமையில் நடந்தது. பின்னதைப் பீகார் மாநிலத்தின் ஆளுநர் திருவாளர் அனந்தசயனம் ஐயங்கார் தொடங்கி வைத்து நல்லதோர் தொடக்க உரையும் ஆற்றினார்.

ஆசிரியர்களின் மதிப்பை உயர்த்துதல், (Improvement of Teacher Status) செய்தியும் விளம்பரமும், (Information and Publicity) ஊழியங்களுக்கு நிதியுதவி, (Financing of Services) நிருவாகமும் நடைமுறையும் (Administration and operation) என்ற பல தலைப்புக்களின் கீழ் "ஆசிரிய அமைப்புக்களின் பங்கு" என்னும் பொருள் (The Role of Teacher Organizations) அலகாபாத் மாநாட்டில் நன்கு அலசி ஆராயப்பட்டது. ஆசிரியச் சங்கங்களை நிர்வகிக்கும் முறைகள் என்னும் பிரிவிற்குத் தெ. இ. ஆ. சங்கத்தின் பொதுச் செயலாளர் உயர்திரு மரியப்பிரகாசம் B.A., L.T., J.P. அவர்கள் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே தகுதி வாய்ந்த இடைத்தர ஆசிரியர்களுக்கு இமயம் முதல் குமரி வரை ஒரே சீரான ஊதியம் வழங்குதல், இடைத்தரக் கல்வி மானிய ஆணைக் குழு ஒன்று (Secondary Education Grants Commission) நிறுவுதல்; நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகும் செலவில் 10 சதவீதம் கல்விக்கு ஒதுக்குதல், முபபயன் திட்டத்தை நடைமுறையிலில்லா மாநிலங்களில் நடைமுறைக்குக் கொண்டு வருதல், பஞ்சப்படியை அவ்வபபோது உயர்த்துதல், மேலவையும் கீழவையும் உள்ள மாநிலங்களில் ஆசிரியத் தொகுதியை நீக்குதல் ஆகியவை தொடர்பான நல்ல பல தீர்மானங்கள் பாட்னாவில் நடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இவ்விரு மாநாடுகட்கும், நாட்டின் பல பாகங்களிலிருந்து பேராட்கள் (Delegates) வந்திருந்தனர். ஆனால், தென்னகத்திலிருந்து சென்றிருந்தவர்களின் தொகையோ மிகவும் குறைவாக இருந்தது. இது பெரிதும் வருந்தத்தக்கது.

புகைவண்டிக் கட்டணச் சலுகை உட்பட ஓராசியர்க்குப் போகவரச் செலவு, குறைந்த பட்சம் நூறு ரூபாய்கள்தாம் ஆகியிருக்கும். இம் மாநாடுகட்குச் செல்லாதவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த ஆசிரியர்களுடன் கலந்து பழகும் வாய்ப்பினை இழந்து விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். இந்திய ஒருமைப்பாட்டு எண்ணத்தை இளம் உள்ளங்களில் வளர்க்க வேண்டிய நாம் இந்தியாவில் பல்வேறு பகுதிகட்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதனை நழுவவிடக் கூடாது. பல்வேறு இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு வாழும் மக்களைப் பற்றிப் புரிந்து கொள்வோரின் அறிவு விரிந்ததாகவும் பரந்ததாகவும் ஆகும்; குறுகிய மனப்பான்மை அவர்களை விட்டு அகலும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

அலகாபாத்திற்கு அருகில்தான் காசி உள்ளது; காசியில் இந்து பல்கலைக் கழகமும், லால்பகதூர் சாத்திரியவர்கள் பயின்ற காசி வித்தியா பீடமும் உள்ளன. அன்றைய பாடலிபுத்திரம் இன்றைய பாட்னாவாகும். அது மகதப் பேரரசின் தலைநகராய்த் திகழ்ந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடமாகும். சித்தார்த்தர் புத்தரான இடம் கயையாகும். அந்த இடம் பாடலிபுத்திரத்திற்கு அருகில்தான் இருக்கிறது. சமண சமயத்தை நிறுவிய மகவீரர் பிறந்த இடம் வைசாலியாகும். அந்த இடம் பீகார் மாநிலத்தில்தான் உள்ளது. குரு கோவிந்தர் பிறந்த இடம் பாட்னாவேதான். அவர் பாட்னாவில் எங்குப பிறந்தாரோ அங்கே ஒரு கோவிலும் உள்ளது. மாநாடுகட்குச் சென்றவர்கள் இந்த இடங்களையெல்லாம் கண்டு களிக்கும் வாய்ப்பினைப் பெற்றவர்களாவார்கள்; செல்லாதவர்கள் அந்த வாய்ப்புக் கிடைத்தும் நழுவ விட்டவர்களாவார்கள். ஆதலின் இனிமேல் நடக்கவிருக்கும் அனைத்திந்தியக் கல்வி மாநாடுகட்கேனும் தென்னகத்திலிருந்து ஆசிரியர்கள் திரள்திரளாகச் செல்லுவார்கள என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த இதழில், அனந்தச்யனம் ஐயங்காரவர்கள் அனைத்திந்திய இடைத்தர ஆசிரியர்கள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரையின் முக்கியப் பகுதிகளும், அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் வெளியிடப்படும். ★

ஆசிரியப்பணி அன்புப் பணி

★ ★

'ஆசிரியப்பணி அன்புப்பணி' என்ற கொள்கையை அடைப்படையாகக் கொண்டு கால் நூற்ருண்டாகப் பணியாற்றியவர் சங்கைக்குரிய ஸ்டனிஸ்லாஸ் அடிகளாவர். தூய இராயப்பர் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிருர். இப்பள்ளி இன்றுவரை தலைசிறந்து, புகழோங்கி விளங்குகின்றது என்ருல் அதற்குக் காரண கர்த்தா கப்டஸ்டாஸ் அடிகளே ஆவர். இவரைப்பற்றி இவர் மாணவர்கள் சொல்லுவதாவது :

அன்பின் உருவம் : பாசத்தின் பிறப்பிடம்
அறத்தின் செம்மல் : பண்பின் இருப்பிடம்
அறிவின் தந்தை : மாசற்ற மாணிக்கம்
அன்பின் களஞ்சியம் : மனிதருள் மாணிக்கம்

இவரது வெள்ளி விழா அண்மையில் வெகு விமரிசையாக நடந்தேறியது. எண்ணற்ற மக்கள் இவ்விழாவில் கலந்து களி கூர்ந்தனர். நமது கல்வி இயக்குநர் திரு டைட்டஸ் அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை வகித்து இவரைப்பற்றிப் புகழ்ந்து பேசுகையில்,

ஆயிரம் பேர் வருவார்
ஆயிரம் பேர் போவார்
ஆனுலும் ஒரு சிலர் தாம்
மனிதராக வாழ்வார்

என்று கூறினுர். இவரது பள்ளி வங்காளக் குடாக் கடலோரத்தில் உள்ளது. இவரோ கடல் நடுவில் வரும் கப்பல் கரை சேரக் கலங்கரை விளக்கமாக விளங்குகின்ருர். இவர் கரை சேர்க்கும் கப்பல்கள் வட சென்னை மாணவ மணிகள்தாம் என்று வாயார வாழ்த்தினுர் அப் பெரியார்.

துறவறத்தை ஏற்றுப் பிறர் நலம் பேணும் பெற்றியாளாராக விளங்கும் இவர் ஏழையின் தந்தை. கணக்கற்ற ஏழை மக்களின் குழந்தைகளுக்குத் தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் ஆசிரியர்க்கு ஆசிரியராகவும் நண்பர்க்கு நண்பராகவும் இருந்து விருப்புடன் பழகிப் பிஞ்சு மனங்களைக் கவர்ந்து, அவர் சன்மார்க்க வழியில் செய்விக்கும் பணியில் வாழ் நாளையே கழித்து வருகிறது.

இப்பெரியார் நம் தென்னிந்தியா ஆசிரியச் சங்கத்தின் வெகு நாளைய அங்கத்தினர். சுயநலம் தேடாது குழந்தைகளின் கல்வியே தம் நலமாகக் கொள்ளும் பெரும், பெரும் வழியை வகுக்கின்ருர்.

இவர் போன்ற பெரியார் நீண்ட ஆயுள் பெற்று, நல்ல சுகத்துடன் இப்பெரும் பணியை ஆற்றி நம் ஆசிரியச் சமுதாயத்திற்குப் பெருமை உண்டாக்க இறைவர் அருள்வாராக. ★

கோவை வட்டத் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் யூனியன்
கோயமுத்தூர்

17—12—65

தென்னிந்திய ஆசிரியர் யூனியன் செயலாளர் அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் தயவு செய்து கீழ்க்கண்டவற்றிக்கு விளக்கமும் பதிலும் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. இந்த யூனியன், தென்னிந்திய ஆசிரியர் யூனியனில் அங்கம் வகிப்பதற்கு உரிய நிபந்தனைகள், கட்டணம், எத்தனை பேர் இந்த யூனியனில் இருந்து தங்கள் யூனியனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தெரிவிக்க வேண்டும்?

2. கோவை மாவட்ட ஆசிரியர் சங்கத்தில் இந்த யூனியன் அங்கம் வகிக்க வேண்டுமாயின் செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு? அச்சங்கத்திற்கு எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?

3. இந்தக் கோவை வட்ட மான்யத் துவக்கப்பள்ளி ஆசிரியர் யூனியனில் அங்கத்தினர்களாக இருக்கும் ஆசிரியர்கள், சேர விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மானேஜர் அல்லது கரஸ்பாண்டெண்டு அவர்களிடமிருந்து அனுமதி பெறவேண்டுமா? அனுமதி பெறாமல் சேர்ந்தால் மானேஜ்மெண்டார் நடவடிக்கை எடுப்பார்களா? ஆகிய இவ்விவரங்கள் தெரிந்தால் இன்னும் அநேக ஆசிரியர்கள் இந்த யூனியனில் சேர வாய்ப்பு ஏற்படும்.

இப்படிக்கு அன்புள்ள,

S. A. MUTHUSWAMI
(செயலாளர்)

222, காந்திபுரம் No.
கோயமுத்தூர்-12

[அடுத்த இதழில் பதிலை எதிர்பார்ப்பீராக.]

கற்புத் தீ

(சிதம்பரம் சுவாமிநாதன்

தீ! எங்கும் தீ! தங்கும் வளம் படைத்துப் பொங்கும் நலஞ்செழித்திலங்கும் நகர்முழுதும் தீ!

சங்கத் தலங்கொண்டு தங்கத் தமிழ் வளர்த்த தண்பாண்டித் தலைநகரில் தீ! தீத்திறத்தார் பக்கமெலாம் தீ தீ தீ!

அத்தீ எத்தீ? அதுவே கற்புத் தீ!

பொற்புக் குறையாத போதிலார் திருவினாள்—
கற்புக் குறையாத காதலாள் கண்ணகியாள்,
கண்ணிலே பொறிபறக்க, மண்ணிலே
உயிர் தவிக்க,
விண்ணிலே இன்றியக்க விடுத்த தீ
கற்புத் தீ

சிந்திக்க வைக்கிறதா செந்தீ? சிலம்பு அழைக்கிறது; சிறந்த கதை உரைக்கிறது.........

சோற்றுவளம் காட்டுவது சோழநாடு. ஆங்கே, ஆற்றுவளங் காட்டுவது அழகு மிகு காவிரியே. அத்தகு பொன்னிப் புன்லணங்கு கன்னித் தமிழணங்கு போற்றக் காடு மலையாடி நாடு நகரோடி நீடு கடல்நாடி, மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப் பூவாடையது போர்த்துக் கருங் கயற்கண் விழித்தொல்கித் தன் கணவன் வளவன்தன் செங்கோல் நலம்பாடிச் செந்தமிழின் வளம்பாடிக் காவிரியச் செய்து, காலத்தால் சாகாத பாவிரியச் செய்து, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடிமக்கள் ஆசிபெற்றுப், பெற்றதனால் பெருமையுற்றுப் பேறுபெற்றவளாய்ச் சீரும் சிறப் போடும் சிங்கார நடையிட்டுச் சென்றாள்; சிறந்தவோ ரிடத்தினில் நின்றாள்; ஆங்கே, அலைகடல் அழைக்கக் கலந்தாள். கலந்த விடத்தில் எழுந்ததொரு நகரம்; அந்நகரம், பாக்கம் இரண்டாய்ப் பரந்த பெருநகரம்; அதுதான் காவிரிப்பூம்பட்டினம்.

சோழப் பெருநாட்டின் துறைமுகத் தலைநகராய்க் காட்சியளித்த பூம்புகாரில், திரைகடலோடியும் திரவியம் தேடும் பெருவணிகர் குலத்திலே, வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவானென்னும் இருநிதிக் கிழவன் மகனாய், கோவலன் பிறந்தான். அதே பதியில் அக்குலத்தில், மாகவான் நிகர்வண்கைமாநாய்க்கன் குலமகளாய், ஈகைவான் கொடியன்ன கண்ணகி பிறந்தாள். இருவரும் வளர்ந்தனர்; இளமையில் கிளர்ந்தனர். இவர் களைப் பெற்றெடுத்த இருபெரும் குரவரும் ஒருபெருநாளில், மணவணிகாண மகிழ்ந்தனர்; ஊரார் இவர்க்கிவர் சரியெனப் புகழ்ந்தனர். உடன் இருமனம் கலந்த ஒருமனமாய்த் திருமணம் நறுமணம் பெற்றது. மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து, நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடக் கண்ணகி கரம்பற்றித் தீவலஞ் செய்தான் கோவலன். மங்கல வாழ்த்து முழங்க, இல்லறம் இனிமை வழங்க இருவரும் ஒருவர் ஆயினர். இங்ஙனம் சென்றன சிலவாண்டுகள்; இவைகளே அவர்களுக்கு நல்லாண்டுகள்.........

அப்பெரும் பட்டினத்தில் ஆடல் மகள் ஒருத்தி—மாதவி என்ற பெயரினள்—வாழ்ந்தனள். அவள் கலையிலே சிறந்தவள்; தன்னிலையிலே உயர்ந்தவள். பழமோடு பாலும் தேனும் போல அழகொடு

ஆடல் பாடல் பெற்றவள்; யாவையும் முறையோடு கற்றவள். அவள், கொற்றவன் சோழன் கொலுமண்டபத்தில், கற்ற நாட்டியம் காட்டினள். கலைத்திறங் காணும் நிலைக்களமங்கே, தலையரங்கேறித் தலைக்கோலம் பெற்றனள்..........

காவலன், மாதவிக்கு அளித்த மாலையைக் கோவலன் மகிழ்ந்து கொண்டனன். மாலையை வாங்கிக்கொண்டவன், மாதவிக்கும் கொண்டவன் ஆயினன். பிறகென்ன? மாமலர் நெடுங்கன் மாதவி மனையில், மனைவி கண்ணகியை மறந்து கிடந்தனன்; மையலுற்றனன்; மதிப் பிழந்தனன்..........

கண்ணகியோ, செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப, பவள வாள்நுதல் திலகம் இழப்பக் கையறு நெஞ்சமுடன், கணவன் கோவலன், 'இன்று வருவானோ? நாளை வருவானோ? இன்னுமொரு நாளும் நின்று வருவானோ? என்று வருவானோ?' என்றெண்ணித் தவித்திருந்தாள்; அல்லிருந்து ஆட்சிசெய்யும் இல்லிருந்து துடித்திருந்தாள். செல்விருந்து கண்டு நின்று வருவிருந்து வர மகிழ்ந்து, நல்விருந்து தந்து நிற்கும், தகைமை தனக்கில்லையென்று, வெந்துநொந்தழிந்திருந்தாள்.....

நாழிகை வாரம் நடைபோடத் திங்கள் பருவம் நடமாடப் பெயர்ந்தது வருடம் நினைவாக!

பூம்புகாரின் பெருவிழா—புனிதத் திருவிழா—இந்திரவிழா வந்தது. ஆ ஆ! கடற்கரை யெங்கும் அழகுக் கோலம்; சித்திரைவேனிற் பூர்ணிமைக் காலம்! அலைகடல் நாடி, அலையலையாய் மக்கள், அலையொலி குலைத்துச் சென்றுகொண்டிருந்தனர். சிறியதோர் அலையினைப் பெரியதோர் அலை வாரியணைத்துத் தழுவுதல்போல, சிங்கார மகளிரைச் சீருடைய நம்பிமார் தழுவியணைத்துச் சென்றனர்; என்னென்னவோ இன்பங் கண்டனர். ஆங்கே, கோவலனோடு மாதவி தானும் கோலமயில்போல் சென்றாள். இருவரும் ஆடியும் கூடியும் மகிழ்ந்தனர்; இன்ப வெள்ளத்திலே நீந்தினர்; இன்னிசை யாழினை ஏந்தினர்; காவிரியன்னையை வாழ்த்தினர்; கானல் வரியினைப் பாடினர். அக்கானல் பாடல் பாடப்பாடக் கோணல் கொண்டது நெஞ்சம்; கூனல் கண்டது காதல்! முடிவில், மாயப்பொய் கூட்டும் மாயத்தாள் மாதவியெனக் கோவலன் எண்ணிவிட்டான். அவனுடைய ஊழ் வினை அவன்பாற்சேரத் தொடங்கிற்று. அன்றே, அங்கே, அப்பொழுதே மாதவியைக் கைவிட்டான்; சூழ்வினை வயப் பட்டான்.

கோவலன் மனத்தெளிவு பெற்றான்; மங்கை நல்லாள் கண்ணகியைக் காண விழைந்தான். தன்னில்லத்துக்குச் செல்லத் தனக்கே வெட்கமும் துக்கமும் ஏற்படக்கண்ட கோவலன், மனத்துன்பமுடன் மாலைமயங்கும் நேரத்தில் மனை நாடிச் சென்றான். ஆங்கே, தூயநெறி நின்ற கண்ணகி, தீயகனவொன்று கண்டு தவித்திருந்தாள். வந்தான் கோவலன் வந்தவனை-மனம் நொந்தவனைக் கண்டாள் கண்ணகி. 'குலம்தருவான் பொருள் குன்றம் தொலைந்த; இலம்பாடு நாணத்தரும் எனக்கு' என்றான். நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டி, 'சிலம்புள; கொள்ளும்' என்றாள். ஆனால், அவனோ அவளை நோக்கி, "இச்சிலம்பினையே வாணிகமுதலாகக் கொண்டு, இழந்த பொருளை ஈட்டுவேன். இவ்வூரில் இனியும் உயிர்தங்கி வாழேன். என்னோடு நீயும் எழிலார் மதுரைக்கு எழுக" என்றான். காரிருள் நின்ற கடைநாள் விடியலில் காலம் இழைத்த கோலம் நினைத்து, வீட்டைத்துறந்தும் நாட்டை மறந்தும் வெளியேறினர் இருவரும். இனி, அவர்கள் பூம்புகார் புகார்.

கவுந்தி அடிகளார் துணைகொண்டு, அவனும் அவளும், அணிமதுரைப் பெருநகர்க்குத் தடைபல கடந்து சென்றனர். அதுவரை வீட்டைவிட்டே வெளிவந்தறியாக் கண்ணகிக்கு யாவும் புதுமையாயிருந்தன. அவள்தன் வண்ணச்சீறடியினை மண்மகள் அன்றும் அறிந்திலள்; இன்றும் அறிந்திலள்; இனியென்றும் அறிந்திட மாட்டாள்.

உலகு புரந்தூட்டும் உயர்ப்பேர் ஒழுக்கத்துப் புலவர் நாவிற்பொருந்திய பூங்கொடி—வையை என்ற பொய்யாக் குலக்கொடி—தையற்கு உறுவது தானறிந்தனள்போல் புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக் கண்ணிறை நெடுநீர் கரந்தனள்; அவர்களோ அவ்வையும் கடந்தனர்.

மதுரையிலே, அவ்விருவர்க்கும்—உடைப்பெருஞ் செல்வர் மனைபுகும் அளவும் இடைக்குல மடந்தை மாதரி நல்லாள் அடைக்கலம் தந்தாள்; ஆதரித்தாள். ஆம்! விரைவிலே கண்ணகி அடுத்த மனை புகப்போவது உண்மை! அம்மனையும் அரண்மனையே என்பதும் உண்மை! உடைப்பெருஞ் செல்வமங்கே உடைப்பெடுத்தழியப்போவதும் உண்மை! அதனுல்தான், இடையிலே, குலமடந்தை, கண்ணகிக்கு அடைக்கலந்தந்து 'ஒருநாளேனும் அவள் வாழ்வில் திருநாள் அமையட்டும்' எனவெண்ணி மீண்டும் மனையறம் படுத்தினுள் போலும்! மேலும்! குலமடந்தையல்லவா; அப்படித்தானே செய்வாள்!

மாதவி பறித்த வாழ்வின்பத்தை, மாதரி அளித்தாள் மதுரையில் ஒருநாள். அவ்வொருநாள் கண்ணகிக்கு நன்னுள். அந்நாள் அவளோ, மண்ணக மடந்தையை மயக்கொழிப்பாள்போல் தண்ணீர் தெளித்தாள் தரையிலே! அது, நிலமகள், குலமகள் படவிருக்கும் துன்பமெண்ணி அழுவது போல் தோன்றியது. வாழையிலை விரித்தாளவ்விடத்திலே! அதுவோ, அந்நிலமகள், பட்டுத்துகில் கொண்டு கண்ணீர் துடைத்துத் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு கிடப்பதுபோல் தோன்றியது.

கண்ணகி, கோவலனுக்குத் தன் கையால் சமைத்த அமுதம் படைத்தாள். அவனுண்டான்; அவள் கண்டாள்! அதனோடு என்னென்னவோ இன்பம் கண்டாள் அக்கோதை, பேதை! அவளுக்கே அப்போது தெரியாது; அதுதான் அவனுக்கு அவள் தரும் கடைசிப் படையல்!

"பொன்னே, கொடியே, புனைபூங்கோதாய்; நாணின் பாவாய், நீணில விளக்கே; கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி! சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு, யான்போய் மாறிவருவன், மயங்காதொழிக" எனக் கூறிக் கருங்கயல் நெடுங்கண் காதலிதன்னை ஒருங்குடன் தழுவினுன் கோவலன். ஒரு முறை அவளைக் கூர்ந்து நோக்கினுன்; ஒரு தனி மகளாய் நிற்பதைக் கண்டான்; ஒரு சிலம்பதனைக் கையிலே கொண்டான்; ஒரு தனி மகனுய் விற்கச் சென்றுன். அந்தோ! ஒருவிதி பெரிதாய் வீதியிருந்தது; நீதியுமங்கே மாறியிருந்தது.

கடைத்தெருவிலே ஒற்றைச் சிலம்பை விற்றுவரச் சென்ற கோவலன்முன், காவலன் பாண்டியனின் பொற்கொல்லன் எதிர்ப்பட்டான். அப்பொற்கொல்லன் அரசியின் சிலம்பைத் திருடிய கள்ளன். தன் கையகம் இருந்த சிலம்பை அவனிடம் காட்டினுன் கோவலன்; விற்றுத்தருமாறும் வேண்டினுன். கையிலுள்ள கோவலன் சிலம்பும் தான் திருடிய காவலன் சிலம்பும் ஒன்றுபோலிருக்கக் கண்டவன் சூழ்ச்சி வகுத்துவிட்டான். கோவலனைத்

தன் வீட்டில் இருக்கச்சொல்லிக் கொல்லன் வழுதிபுகழ்க்கோயில் சென்றான்.

அரண்மனையில் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், பட்டத் தரசி பக்கமிருக்க, நாட்டிய மகளிற் காட்டிய ஆடலையும் அதனோடு எழுந்த பாடலையும் கண்டும் கேட்டும் களித்திருந்தான். அன்றென்னவோ அத்துடன் நில்லாது, ஆடும் மகளிர் அழகையும் அனுபவித்தான். அரசி கோப்பெருந்தேவி அதனைக் கண்டனள்; உடன், ஊடல் கொண்டனள்; ஆடலை வெறுத்து அந்தப்புரம் சென்றனள். அரசனோ ஆடலால் விளைந்துவிட்ட அவலத்தால் கவலைகொண்டான்; அரசியின் ஊடல் தணிக்க விழைந்தான்; கோப்பெருந் தேவியின் கோயில் நண்ணினான். அப்போது, வாயில் கடந்து வாழ்த்திய வாறே பொன்வினைக் கொல்லன் பொய்யனாய் வந்தான்; தன்வினை நின்ற செழியனை நோக்கினான். அவனிடம், கோயிற் சிலம்பு கொண்ட கள்வனைப் பிடித்திருப்பதாய்ச் சொன்னான். வினை விளைகாலம் ஆதலின், யாவதும் சினையலர் வேம்பன் தேரானாகி, மனம் சரியில்லாத நேரத்திலே மௌனம் கொள்ளாமல், அரசனென்ற நிலைமறந்து, அறிவிழந்து சொல்லிவிட்டான் ஒரு சொல்!

> "ஈங்கு என்
> தாழ்பூங் கோதைதன்—கால்சிலம்பு
> கன்றிய கள்வன் கையது ஆகில்
> கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு."

என்றான். இங்ஙனம் சொன்னவுடன், விரைவிலே வீரபத்தினியின் சூளுரையால் தாழ்ந்து விழப்போகும் பூங்கோதையாள் கோயில் நாடிச் சென்றான். பாவம்! அவன் சொல்ல வந்தது இதுவன்று. 'கொல்ல வேண்டிய கள்வனையும் கோதைதன் சிலம்பையும் கொணர்க,' எனக் கூறவந்தவன், மனமயங்கிய நிலையிலே, சொல்விழுக்குப்படக் 'கொன்று' என்று கூறிவிட்டான். ஆடல் காணாது அழகைக் கண்டவன்—ஊடல் தாளாது உணர்வை இழந்தவன் சொல்லில் ஆடல் கண்டுவிட்டான். அதன் பலன், எழுந்தது பத்தினியின் வீரச் சொல்லாடல்! எரிந்தது முத்தமிழ் ஆடிய கூடல்! நாகாக்க மறந்துவிட்டான் நாட்டைக் காப்போன்.

> "யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு."

என்னும் குறள் விடுத்த குரல், அவன் செவியில் அச்சமயம் விழவில்லைபோலும்! ஐயகோ! விழாத காரணத்தால், விழாத வழுதி புகழ் விழப்போகிறதே! அழாத மாமதுரை அழப்போகிறதே! எழாத கொடுமையும் எழப்போகிறதே! ....

பாண்டியனின் ஆணை! கோவலன் கொலை செய்யப்பட்டான்; குருதி வெள்ளத்திலே பிணமாய்க் கிடந்தான். காவலன் கோல்வளையக் கோவலன் வாயிலாய் ஊழ்வினை அமைந்தது. கோவலன் உயிர் போகக் காவலன் வாயிலாய் அதே ஊழ்வினை அமைந்தது. அவ்வூழ்வினையின் மனித வடிவமே பொன்வினைக் கொல்லன்!

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டாள் கண்ணகி. அந்தோ! பாவையவள் பறக்கவியலாப் பூவையானாள்; புலம்பினாள், அழுதாள்; அரற்றினாள்; விழுந்தாள்; துடித்தாள்; எழுந்தாள்; தவித்தாள். இழந்துவிட்ட வாழ்வைப் பெற வந்த இடத்தில், நடந்துவிட்ட தீமையினை நினைத்தாள். நினைத்தவுடன், கண்ணகி மடந்தை மண்ணக மடந்தையை அணைத்தாள். மண்ணிருந்த வீரம், அவள் கண்ணிருந்த வீரமாயிற்று. வீரபத்தினியாய் எழுந்து நின்றாள்; விளித்தாள் கதிரவனை! காய்கதிர்ச் செல்வன், 'நின் கணவன் கள்வனல்லன்; இவ்வூரை எரி

யுண்ணும்' என்றான். பக்கத்திருந்தோர் கேட்டனர்; பத்தினி யென்றவளை யேத்தினர்.........

அல்லலுற்று, ஆற்றாது, அழுகின்ற கண்ணகியைக் கண்டு, மல்லல் மதுரையார் எல்லாரும் தாமயங்கிக் 'களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி, வளையாத செங்கோல் வளைந்ததே' என்றெண்ணி, 'இனி யென்ன வாகுமோ? ஏது நேருமோ' எனவும் எண்ணிப் பயந்தனர். கற்பரசி கண்ணகியோ, புண்தாழ் குருதி புறஞ் சோரக்கிடந்த கணவனைக் கண்டாள்; கண்ணீர் பெருக்கெடுத்தோடப் புலம்பினாள். 'பெண்டிரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?' என்று சொல்விடுத்துக் கணவனைத் தழுவினாள். கண்டோர் வியக்கக் கற்பின் திண்மையால் கோவலன் எழுந்தான்; கொண்டவள் கண்ணீர் துடைத்தான்; ஒருசில மொழிந்தான்; மறுமுறை மறைந்தான்.

மக்களில் வியந்தவர் சிலர்; பயந்தவர் சிலர்; அனைவருமே கண்ணகியின் நேருக்கு நேர்நிற்க அஞ்சினர். அவளோ போருக்குச் செல்பவள்போல், வீர நடைபோட, நெஞ்சிருந்த ஈரம் மறைந்தோட வஞ்சினமுறைத்தாள்; வழக்குரைக்கச் சென்றாள். கணவனே கண்கண்ட தெய்வமென எண்ணியவள், கற்புக் கடம்பூண்டு தற்காத்துக் கொண்டாள்; தன்னால் இயன்றவரை தற்கொண்டான் வாழ்வை வளமாக்கினாள். தகைசான்ற சொற்காத்துக் கொள்ளும் தகுதியைப் பெறவந்த இடத்தில் வேறுகதை நடந்துவிடச் சோர்விலாப் பெண்ணாகி, முயன்றேனும் சொற்காத்துக் கொள்ள விரும்பினாள். அப்போது அவள் கண்முன் நின்றது கணவன் இறந்த கோலம். கள்வனென்ற பழிச்சொல் ஏந்தி இறந்த கணவன் பழி துடைப்பதுதான் தன் முதற்கடமை என எண்ணினாள் கண்ணகி. அஃதன்றி அவனோடு தானும் உயிர்விடின் பழிச்சொல் நிலைத்து நிற்பதோடு, தனக்கும், தங்கள் குடும்பத்துக்கும்—ஏன்—தன்னாட்டுக்கும் இழிவினைத் தருமென அவள் எண்ணியதால்தான் பழி துடைக்க முற்பட்டாள்; அதன்மூலம் சொற்காத்துக் கொள்ளும் வகையறிந்தாள். அந்நேரம், யாவும் நடக்கக் காரணமாயிருந்த சிலம்பு அவள்முன் தோன்றிச் சிரித்தது. இனி, மேலும் நடக்கப்போவதற்கும் காரணமாகச் சிலம்பே இருக்கட்டுமென நினைத்துத் தான் வைத்திருந்த மற்றொரு சிலம்பைத் தன் கையிலேந்தித் தண் பாண்டிக் கோயில் சென்றாளவள்.

பாராளுமன்றத்தில் பக்கம் பலரிருக்கப் பட்டத்தரசியோடு வெண்கொற்றக் குடை நிழலில் வீற்றிருந்தான், தன் கொற்றம் புகழாக ஏற்றிருந்த நெடுஞ்செழியன். அப்போது, கள்ளத்தீப் பழிச்சொல்லால் உள்ளத்தீச் சுடர்கொழுந்து விட்டெரியக் கொற்றவையோவென எண்ணுமாறு கொற்றவன் முன்னே தோன்றினாள் கண்ணகி. தோற்றங்கண்டு திகைத்தான் தென்னவன். மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்கண்ட வையைக்கோன் அவளை நோக்கி, 'நீர்வார் கண்ணை, எம்முன் வந்தோய்! யாரையோ, நீ?' எனக் கேட்டு விட்டான், அவ்வளவுதான்! துடித்தெழுந்தது கண்ணகி உள்ளம்; குதித்தெழுந்தது சொல்மழை வெள்ளம்!

"தேரா மன்னா!"

அதிர்ந்தது அவை! அடுத்தது?

(தொடரும்)

ஆசிரியர்களின் சேமநல நிதி (Provident Fund) தமிழக அரசின் புதுத்திட்டம்

சென்ற ஆண்டிலிருந்து எல்லா இடைநிலைப்பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்கக்கூடாது என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்ததை அனைவரும் அறிவர். இவ்வாணை தனியார்ப் பள்ளிகளைப் பெரிதும் பாதித்தது; பாதிக்கின்றது. ஆதலின், தனியார்ப் பள்ளிப் பிரதிநிதிகள் சென்ற ஆண்டின் தொடக்கத்தில் முதலமைச்சரைச் சந்தித்து ஆசிரியர் சேமநல நிதியுடன் சேர்த்துக் கட்டப்படும் மேலாண்மையின் பங்குப் பணத்தையும் (Management's Contribution) அரசே கட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அரசு ஒப்புதலளித்து விட்டது. அதன் விளைவாக, உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை 1964-65 ஆம் ஆண்டிலிருந்தும், (உதவி பெறும்) தொடக்க நிலைப் பள்ளைகளைப் பொறுத்தவரை 1965-66 ஆம் ஆண்டிலிருந்தும் மேலாண்மையினர் (Managers) ஆசிரியர் சேமநல நிதியுடன் தங்கள் பங்குப் பணத்தைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுவரைக்கும் ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 6 சதவீதம் சேமநல நிதியாகப் பிடிக்கப்பட்டு; அத்துடன், 3 சதவீதம் பணம் மேலாண்மையின் பங்குப் பணமாகச் செலுத்தப்பட்டது. ஆசிரியர் ஒருவர் ஓய்வு பெறும் போது அவர் எவ்வளவு பணம் சேமநல நிதியாகப் பெறுகிறாரோ அத்துடன் அரசினரால் 3 சதவீதம் கூட்டிக் கொடுக்கப்பட்டது. இனி, ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு. சேர்த்து வைத்த சேமநல நிதியுடன் மேலாண்மையின் பங்குப் பணத்தையும், தன்னுடைய பங்குப் பணத்தையும் சேர்த்து அரசு கொடுக்க முன் வந்துள்ளது. (நெருக்கடி நிலை காரணமாகச் சேமநலநிதி 11 சதவீதமாகப் பிடிக்கப்பட்டு வருகிறது. அதிகப் படியான 5 சதவீதத்திற்கு அரசு பங்குப் பணம் செலுத்தாது).

இம்முடிவு தனியார்த் துறைப் பள்ளிகளுக்கு ஒரு நல்ல நிவாரணமாகும். பெருமளவில் நடத்தப்படும் சில உயர்நிலைப் பள்ளிகள் இனிச் சேமநல நிதியுடன் ஆண்டுதோறும் 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரை கட்டவேண்டிய கட்டாயத்தில் இல்லை.

தெ. ஆ. சங்கத்தின் கருத்து

புதிய இடைநிலைப் பள்ளிகள் தொடங்குவதற்கு 70,000 ரூபாய்கள் கட்டளை நிதியாகச் (Endowment Amount) செலுத்த வேண்டும் என்ற சட்டம், தனிப்பட்டவர்கள் புதுப்பள்ளிகள் தொடங்கத் தடையாக இருக்கும் என்ற கருத்தைத் தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தின் செயல் நிறைவேற்று குழு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களின் சம்பளத்தை அரசே செலுத்தி விடுவதால், மேலாளர்களின் பணப் பொறுப்புக்கள் பெரிதும் குறைந்துள்ளன. ஆதலால் கட்டளை நிதி 70,000 ஆக உயர்த்தப்பட்டிருப்பது தேவையற்றது என்று செயல் நிறைவேற்று குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ★

இராம காதை

(இசை நாடகம் பள்ளிப் பாலர்க்குரியது)

உள்ளத்தின் கதவுகள் கண்களடா— என்ற இசையில் பாடலாம்.

1. அயோத்தியை ஆண்டவன் தசரதனும்
அவனுக்கு மூன்று மனைவிகளாம்
கோசலை கைகேயி சுமத்திரையாம்
குலமக்கள் நால்வரை ஈன்றனராம் — அயோத்தி

2. ராமன் என்பவன் மூத்தவனும் — அந்த
ராச்சியத்தை நலமாய்க் காத்தவனும்
பரதன் கைகேயி மகனுவான் — வீர
இலக்குமணன் சத்துருக்கனன் தம்பியாவார் — அயோத்தி

3. யோகி விசுவாமித்திரருடன் — வீரத்
தியாகி ராம இலக்குவர் சென்றார்
யாகத்தை நலமுடன் காத்துநின்றார் — அரக்கர்
கூட்டத்தைப் பூண்டோடு அழித்துவென்றார் — அயோத்தி

4. ஜனகர் மிதிலையை ஆண்டவராம் — அந்தச்
சீதை அவரின் திருமகளாம்
கனரக வில்லை ஒடித்து வென்றான் — ராமன்
கடிமணம் சீதையை முடித்துச் சென்றான் — அயோத்தி

5. கூனியின் சூழ்ச்சியால் கைகேயி — பல
கொடுமைகள் செய்திட்டாள் ராமனுக்கு
கானகம் சென்ற ராமனுடன் — தம்பி
இலக்குமணன் சீதையும் சென்றாரே — அயோத்தி

6. காடு சென்ற திருமகனை — அங்கே
கண்டு வரவேற்றவன் நற்குகனும்
தேடி வந்த பரதனுக்கு — ராமன்
சிறந்த அறிவுரை கூறச்சென்றான் — அயோத்தி

7. நெறி தவறிய சூர்ப்பனகை — செய்த
சூழ்ச்சி யாலே ராவணனும்
பறித்தே செல்லப் பறந்து வந்தான் — சீதையைப்
பாய்ந்தே தூக்கி மறைந்து சென்றான் — அயோத்தி

8. மாய மானை விரட்டிச் சென்ற — ராமன்
வஞ்சகர் சூழ்ச்சியை அறிந்து கொண்டான்
தூய சீதையைத் தேடிச் சென்றான் — சடாயு
சொன்ன திசையை நாடிச் சென்றான் — அயோத்தி

9. அநுமன் சுக்ரீவன் உதவியாலே — இலங்கை
அரக்கர் கூட்டத்தை அழித்து வென்றான்
குணங்கெட்ட ராவணனைக் கொன்று — ராமன்
குலமகள் சீதையை மீட்டு வந்தான் — அயோத்தி

10. ஆண்டு பதினான்கு முடிந்தபின்னே — ராமன்
அரசனாக முடிபுனைந்தான்
நீண்ட புகழுடன் ஆண்டுவந்தான் — மக்கள்
நிலமதில் சுகமுடன் வாழ்ந்து வந்தார் — அயோத்தியை

★

நதி பிறந்த கதை

1. ஓடும் மேகங்களே கூடி வாரீரோ
வாடும் மனங்குளிர மழையைத் தாரீரோ — ஓடும்

2. ஆதவனின் வரவாலே
ஆழ்கடல் ஆவியாய் மாறும்
மா தேவனின் அருளாலே
மாநிலம் செழித்து வளரும்
மழையாய் நீயும் பொழிவாய்
நதியாய் பாய்ந்தே வருவாய்
மலைமேல் தோன்றி ஓடி — உப
நதியாய் ஜீவ நதியாய் — கிளை
நதியாய் ஓடுதே ஆறு — ஓடும்

3. காடு மலை கடந்து செல்லும்
கழனியில் நடந்து செல்லும்
மேடு பள்ளம் தாண்டிச் செல்லும்
மேதினி வாழச் செய்யும்
கடலே பிறந்த வீடு! காற்றே புகழ்ந்து பாடு
கழிமுகமாய்ச் செழிப்பதைப் பாரு — அதன்
உடலே கார்முகிலாய் மாறி
பொழிவதை நீயும் பாரு — ஓடும்

ஆசிரியர்: காரைக்குடி — S. ஜெயராஜ்,
சிறுமலர் R. C. உயர் தொடக்கப்பள்ளி, செஞ்சை, காரைக்குடி.

சென்னை அரசு கல்வி பொதுச் சுகாதார இலாக்கா
அரசாணை Ms. No. 1762 கல்வி

தேதி 24—9—'65

(சுருக்கம்)

பள்ளியாண்டின் இடையிலேயே ஓராசிரியர் (அவர் எந்தவித (Under all managements) மான மேலாண்மையின் கீழ்ப் பணி புரிந்தாலும்) ஓய்வு பெற நேர்ந்தால், அவரை மீண்டும் அதே பள்ளியில், கோடை விடுமுறைக்குப் பள்ளி மூடும் வரை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும்.

கோடை விடுமுறை முடிந்து குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்குப் பிறகும், பள்ளியாண்டின் இடையிலும், அது முடியு முன்பும் ஓய்வு பெறும் ஆசிரியர்களை மட்டும் வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு (Subject to the usual Conditions) மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். (May be reemployed) இது முன்னைய உத்தரவாகும்.

அறிவியல் ஆசிரியர்களும், கணக்கியல் ஆசிரியர்களும் இனி வரும் சில ஆண்டுகள் வரை கிடைப்பது அரிதாய் இருக்குமாதலால், பள்ளியாண்டின் இடையிலேயே ஓய்வு பெற நேரிடும் ஆசிரியர்களின் ஊழியத்தை அதே சம்பளத்தில் தொடர்தல் வேண்டும். இது இப்போதைய உத்தரவாகும்.

நிதி இலாக்கா
(Finance Department)

நினைவுக் குறிப்பு (Memorandum) எண் 129254=FR/64-4 தேதி 28—10—1965

(சுருக்கம்)

என்புருக்கி நோயால் (Tuber culosis) வருந்தும் அரசு ஊழியர்களுக்குத் தனிப்பட்ட விடுக்கை (Extra-ordinary Leave) கொடுக்குமுன், அவ்விடுக்கை தரும் அதிகாரி மருத்துவ நற்சான்றிதழை (Medical Certificate) அவர்களிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்ட பின்னரே விடுக்கை தரவேண்டும். படிப்பயனோடு கூடிய விடுக்கை (Leave with allowances) எடுத்தற்கியலா நிலையிலுள்ள அரசு ஊழியர்களுக்கு மட்டும்தான் கருணைப்படி (ex-gratia allowance) பெறும் தகுதியுண்டு. மருத்துவம் முடிந்த பின்னர் மீண்டும் வேலை செய்யத் தகுதியுடையவர் இவர் என்று மருத்துவர் சான்றிதழ் வழங்குவதும் வேண்டும். எந்த அதிகாரி அரசு ஊழியருக்குக் கருணைப்படி வாங்கித் தருகிறாரோ அவர், மருத்துவம் முடிந்தபின் இவ்வூழியர் வேலைக்குத் திரும்புவார் என்ற மருத்துவக் குறிப்புரையைச் சம்பளப் பட்டியலில் குறித்து அனுப்புவார். இவ்விதி அரசு கடைநிலை ஊழியர்களுக்கும் பொருந்தும். ★

பாறைகள்
MINERALS

[பிறையணிவோன்]

பாறைகள் கனிப்பொருள்களால் ஆனவை. கனிப்பொருள்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தனிமங்களால் (Elements) ஆனவை. மேற்கோளாக நாம் பருகும் தண்ணீர் ஒரு கனிப்பொருளாகும். நம் உணவுக்குச் சேர்த்துக் கொள்ளும் உப்பும் ஒரு கனிப்பொருளே. சொல்லப் போனால் உயிருள்ள விலங்கினங்களும், தாவரங்களுந் தவிர ஏனையவெல்லாம் கனிப்பொருள்களே. ஒருசில பாறைகள் ஒரு தனிக் கனிப்பொருளால் ஆனவை ; மற்றவை பல கனிப்பொருள்கள் சேர்ந்ததால் தோன்றியவை. பாறைகளில் மிகச் சிறியனவற்றை மணல் என்கிறோம். மிகப் பெரிய பாறைகளைப் பாறுங்கற்கள் என்கிறோம். இடைப்பட்ட வடிவும் பரிமாணமுங் கொண்ட பாறைகளைப் பரற்கற்கள் என்றும், துறுகற்கள் என்றும், கூழாங்கற்கள் என்றும், கற்கள் என்றும் பலவாறு பெயரிட்டு அழைக்கின்றோம். பாறைகளைப் பலவடிவங்களில் காண்பது போல சிவப்பு, நீலம், பழுப்பு, மஞ்சள் போன்ற பல நிறங்களிலும் காணலாம்.

தழற்பாறைகள் (Igneous Rocks)

மூன்று முக்கியமான பாறைவகைகளில் ஒன்று தழற்பாறைகள். பெயரைக் கொண்டே இவ்வகைப் பாறைகள் தீ அல்லது வெப்பத்தினுல் உண்டான பாறைகள் என்பது விளங்கும். இவற்றை உருகி உறைத்த பாறைகள் என்றும் கூறுவர். நிலப்பரப்புக்கு அடியில் உருகிய நிலையில் பாறை உள்ளது. இதனை ஆங்கிலத்தில் "மேக்மா" (Magma) என்று கூறுவர். இந்த உருகிய பாறைக்குழம்பு நிலப்பரப்புக்கு மேலே வந்து குளிர்ச்சி யடைந்து இறுகி உறையும்போது அமையும் பாறையே தழற்பாறைகள். எரிமலை வெடித்துக் கிளப்பும் எரிமலைக் குழம்பு (Lava) உறைந்தால் அமைவதும் தழற்பாறைகளே. தழற்பாறைகள் பலவகைப் படும்.

சில வேளைகளில் பாறைக்குழம்பு நிலப் பரப்பிற்கு வெளியில் வழிந்து வந்து குளிர்ச்சி அடைவதில்லை. நிலப்பரப்புக் குள்ளேயே குளிர்ச்சி அடைந்து விடுவதுண்டு. இவ்வகையில் குளிர்ந்த பாறைகளைக் கருங்கல்(Granite) என்கிறோம். இவ்வகைப் பாறைகளை மிகச்சாதாரணமாகக் எங்குங் காணலாம். காக்காய்ப்பொன் அல்லது அப்ரகம் (Mica), ஃபெல்ஸ்பார் (Felspar), பாறைப் படிகம் (Quartz) இவை சேர்ந்தானதே கருங்கல். சிவப்பு, மஞ்சள், பழுப்பு முதலான பலவண்ணங்களில் இப்பாறை காணக்கிடக்கின்றது. டையோரைட் (Diorite) என்னும் வகை ஆழ்ந்த கறுப்பு நிறத்தில் இருக்கும். இதற்குக் காரணம் வெண்மையான பாறைப் படிகம் குறைவாகச் சேர்ந்திருப்பதே ஆகும்.

ஃபெல்ஸைட் (Felsite) என்பது மற்றொரு வகைத் தழற்பாறை. இவ்வகைப் பாறைகள் எரிமலைக்குழம்பு மிகவிரைவாகக் குளிர்ச்சிஅடைவதால்உண்டாகின்றன. இளம் பழுப்பு, ப்ச்சை, மஞ்சள், முதலான வண்ணங்களில் இப்பாறைகளைக் காண முடியும். ஆழ்ந்த நிறங்கள் இவ்வகைப் பாறைகளுக்கு இல்லை. எரிமலைக் குழம்பு விரைவாகக் குளிர்ச்சி அடையாமல் மெள்

ளக் குளிர்ந்து உறையுமானால் ஆப்சிடியன் (Obsidian) என்றவகைப் பாறை தோன்றும். இவைகள் வண்ணக் கண்ணுடிகள் போல் தோன்றும். இயற்கையில் உண்டான கண்ணுடிகளே இவைகள். இந்தக் கற்களைக் கொண்டே அம்பு, ஈட்டி, முதலானவற்றின் தலைகளைச் செய்து கொண்டனர் பண்டைய மனிதர்கள்

வண்டல் படிவுப் பாறைகள் (Sediment ary rocks) :

வண்டல் படிவுப் பாறைகள் ஓடைகளும், ஆறுகளும் சேர்க்கும் களிமண், மணல், சிறு கற்கள் இவைகளால் ஏற்படுகின்றன. ஆறு கொணரும் வண்டலில் பெரிய கற்கள் முதலிலும், மற்றவை அளவுக்குத் தக்கபடி பின்னரும் கடலில் படிகின்றன. ஒவ்வொரு நாளும் வண்டல் மண் ஆண்டுக் கணக்காகப் படிகின்றது. மேலே படிகின்ற வண்டல் கீழே முன்னரே படிந்துள்ள வண்டலை அழுத்துகின்றது. இந்த அழுத்தத்தோடு தண்ணீரின் கனமும் சேர்ந்து அழுத்துகிறது. அழுத்தம் அதிகமாக அதிகமாகச் சிறு மணற் குவியல் இறுகிப் பாறையாகிறது. இவ்வகையில் அமைந்த பாறைகளை மணற்கல் (Sand stone) அல்லது சந்தனக்கல் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். மணற் கற்கள் கட்டிடச் சுவர் அமைக்கப் பெரிதும் பயன்படுகின்றன. பழுப்பு மஞ்சள், சிவப்பு போன்ற பல வண்ணச் சாயலில் இவை கிடைக்கின்றன.

வண்டல் படிவுப் பாறைகள் பெரும்பாலும் ஆழமான பெரிய ஏரிகளிலோ, கடலிலோ நீருக்கடியில் உண்டாகின்றன. சில நேரங்களில் ஈரமில்லாத பூமியின் மேற்பரப்பிலும் வண்டல் படிவுப் பாறைகள் உண்டாகின்றன. மேற்கோளாகப் பல்லாண்டுகளுக்கு முன்னர் எரிமலைகள் கக்கிய சாம்பல், தூசி முதலானவைகள் ஆண்டுக் கணக்காக மேலும் மேலும் படிந்து இறுகிப் பாறையாகி இருக்கின்றன. இவ்வகைப் பாறைகளுக்கு எரிமலைச் சாம்பற்கல் (Volcanic tuff) என்று பெயர்.

மணலும் புழுதியும் சேர்ந்தே எல்லா வண்டல் படிவுப் பாறைகளும் உண்டாவதில்லை. சங்கு, நத்தைக் கூடுகள், கிளிஞ்சல், தாவரங்கள், கடல் விலங்குகள் இவற்றாலும் வண்டல் படிவுப் பாறைகள் தோன்றுவதுண்டு. கோடானு கோடி கடல் வாழ் விலங்குகளின் சுண்ணச் சத்தாலான ஓடுகள், அவை இறந்த பின்னர் கடலடிக்குப் போய்ச் சேருகின்றன. இவ்வோடுகள் மிக அதிகமாகச் சேர்ந்து அழுத்தத்தால் இறுகிப் பாறையாகின்றன. இவ்வகைப் பாறைகளைச் சுண்ணப் பாறைகள் (Limestone) என்றழைப்பார்கள். டாலமைட் (Dolomite) என்று ஒருவகை சுண்ணப் பாறை உண்டு. இது எளிதில் உடையுந் தன்மையது. பச்சரிசிபோல் சிறு சிறு துணுக்குகளாய்ச் சிதறும்.

கலவைக்கல் பாறை (Conglomerate) என்றொருவகை வண்டல் படிவப் பாறை உண்டு. இவ்வகைப் பாறைகள் கூழாங்கற்களும் மணல் அல்லது சுண்ணும்புக் கல்லும் சேர்ந்து உண்டானவை. இதிலுள்ள கூழாங்கற்கள் வேகமாக ஓடிய ஆறு அல்லது ஓடையால் கொண்டு சேர்க்கப் பட்டவைகளாக இருக்கும்.

களிமண்ணும் சேறும் (வண்டல் அடை) (Silt) படிந்து படிந்து ஏற்படும் பாறைகளும் உண்டு. இவற்றைக் களிமண் பாறைகள் (Shalf) என்று கூறுவர். இப் பாறைகளில் ஈரம் பட்டு நனைந்து இருக்கும்போது மண் நாற்றம் வீசுவது இவ்வகைப் பாறைகளின் குறிப்பிடத்தகுந்த அம்சம்.

மாறிய பாறைகள் (Metamorphic rocks)

பாறைகள் தோன்றும்போது தழற்

பாறைகளாகவோ, வண்டல் படிவுப் பாறைகளாகவோ தான் இருக்கின்றன. ஒருவகையான பாறையாகத் தோன்றிப் பின்னர் வேறுவகைப் பாறையாக மாற்றமடைந்த பாறைக்கு மாறிய பாறை என்று பெயர்.

வண்டல் படிவுப் பாறைகள் கடலுக்கடியில் ஏற்பட்டபின்னர் மிகுந்த வெப்பநிலைக்கு உட்படலாம். மேலும் புற அழுத்தம் வேறு இருப்பதால் அவைகளின் தன்மை திரிந்து மாறிய பாறைகளாகத் தோன்றும். மேற்கோளாகச் சுண்ணப் பாறை மாறிச் சலவைக்கல்லாகும் (Marble) விந்தையைச் சொல்லலாம். களிமண் கல்மாறப் பலகைக்கல் (Slate) ஆகும்.

பழைய அவிந்தடங்கிய எரிமலைப் பகுதிகளிலும் மாறிய பாறைகளைக் காணலாம். இதற்குப் பூமியின் அடியிலிருந்து நிலப் பரப்பைப் பிளந்துகொண்டு வரும் எரிமலைக் குழம்பு காரணமாகும். குழம்பு பிளந்துவரும் பாதையில் வெப்பத்திற்குக் குறைவேது. வெப்பங் காரணமாக அப் பகுதியில் அமைந்த வண்டல் படிவப் பாறைகள் மாறிய பாறைகளாக மாறும்.

பொறைகல் (Schist) களிமண்கல் மாறுவதால் ஏற்படும் ஒருவகைக்கல். காக்காய்ப்பொன் இதில் சிலசமயம் கலந்து பளபளக்கும்.

தளிர் பச்சை நிறமாகவோ, பச்சை நிறமாகவோ இருக்கும் மாறிய பாறை ஒன்று உண்டு. இதனைச் சறுக்குங்கல்(Serpentine) என்றழைப்பர். இது மெழுகு, அல்லது சவுக்காரத்தைத் தொடுவது போன்ற வழவழப்புடன் இருக்கும். இவ்வகைப் பாறைகளை வெயில் மழை படும்படியான இடங்களில் சிலகாலம் கிடத்திஞல் பொடிப் பொடியாக உதிர்ந்து உடையும். கல்நார் (Asbestoes) இவ்வகைக் கற்களில் ஒரு சந்தனக்கல் அல்லது மணற்கல் மாறி மிக உறுதிவாய்ந்த குவார்ட்டீஸ் கல்லாக (Quartzite) அமையும்.

பல்வகைக் கற்கள் :

எரிமலைக் குழம்பு வெளிவந்து குளிரும் போது சில வேளைகளில் வாயுக்குமிழிகள் மிகுதியாகச் சிறைப்பட்டுக் கடற்பஞ்சு போலத் துளைகளோடு பாறையாவதுண்டு. இவ்வகைப் பாறைகளை நுரைக்கல் (Pumice) என்பர். இது நீரில் மிதக்கக் கூடியது. மிதக்குங்கல் என்றும் இதனை வழங்குவர்.

தண்ணீர் குளிர்ந்து பனிப்பாறைகள் (Ice Bergs) உண்டாகின்றன.

நிலக்கரி ஒரு விதத்தில் வண்டல் படிவுப் பாறை வகையைச் சாரும். இது தாவரங்கள் புதையுண்டு அழுத்தம்பெற்றுக் கரியானதால் உண்டான பாறையாகும்.

நகைக் கற்கள், சாதாரண கற்கள் கண்ணுக்குப் புலப்படுவன போன்று எளிதில் புலப்படாதவை. நகைக்கற்கள் மிகக் குறைந்த அளவிலேயே மாந்தர்க்குக் கிடைக்கின்றன. கிடைத்தற்கு அரியதாய், அரக்குள்ளதாய், வழவழப்பாக்கக் கூடியதாய், விலை மதிப்புள்ளதாய் உள்ள கற்களே நகைக் கற்கள். நகைக் கற்கள் பல நிறத்திலும் கிடைக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் நீலம், வைரம், பச்சை, கெம்பு போன்ற ஒவ்வொரு பெயருண்டு.

கும்பகோணம் நகராட்சித் துவக்கப்பள்ளி

ஆசிரியர் ஒற்றுமைக் கழகம்

கும்பகோணம்

சென்னை மாநில கனம் (முதல்-கல்வி) அமைச்சர்

அவர்கள் சமூகத்திற்கு

கும்பகோணம் நகராட்சித் தொடக்கப்பள்ளி

ஆசிரியர்களின் ஒற்றுமைக் கழகத்தார் கொடுத்த

விண்ணப்பம்

ஐயா,

தற்பொழுது ஆரம்பப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் மூன்று பிரிவுகளுக்குமேல் இருந்தால் ஆங்கிலம் போதிக்க மற்றொரு செகிண்டரிகிரேடு ஆசிரியரை நியமிக்கலாம் என்று அரசாங்க ஆணை அமுலில் இருந்து வருகிறது. நகராட்சிப் பள்ளிகளில் அதே போன்று ஆங்கிலம் போதிக்கப்படும் 3, 4, 5-வகுப்புக்களில் உள்ள பிரிவுகள் மூன்றுக்கு மேற்பட்டால் கூடுதலாகச் செகண்டரிகிரேடு ஆசிரியரை நியமிக்கும்படியாக இக்கழகம் கேட்டுக்கொள்ளுகிறது. நகராட்சிப் பள்ளிகளில் 3, 4, 5-வகுப்புகளில் சேர்ந்து, மூன்று பிரிவுகளுக்கு மேற்பட்டால், தலைமை ஆசிரியரே அரசினர் பாடதிட்டப்படி ஆங்கிலம் போதிப்பது நடைமுறையில் கடினமாக இருக்கிறது. தவிர, தலைமை ஆசிரியர் சிறு விடுதியிலோ அல்லது பிற விடுதியிலோ இருந்தால் ஷை பள்ளிகளில் அவ்வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதிக்கப்படாமலேயே இருந்து வருகிறது. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் தலைமையாசிரியரைத் தவிர, மற்றொரு செகண்டரி கிரேடு ஆசிரியர் அவசியம் தேவையானபடியால் ஷை ஆசிரியரை நியமனம் செய்வதற்கான ஆணை பிறப்பிக்கும்படி அரசினரை இக்கழகம் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறது.

நகராட்சி தொடக்கப்பள்ளி, உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த Headmaster's duty allowance ஐத் தொடர்ந்து எல்லா தலைமை ஆசிரியர்களுக்கும் கொடுக்கும்படி இக்கழகம் அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

அரசாங்கத்தின் நோக்கித்தின்படி ஹையர்கிரேடு ஆசிரியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தியும், ஷை ஆசிரியர்களுக்குச் சம்பள விகிதத்தை திருத்தி அமைக்கு மாறும் இக்கழகம் அரசினரைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறது.

V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
P. சண்முகசுந்தரம்,
செயலாளர்கள்.

இப்படிக்குத்
தங்கள் உண்மையுள்ள,
K. கேசவன்,
தலைவர்.

கும்பகோணம் 17—12—65

கல்வி எதிரொலி

(EDUCATION ECHO)

தமிழாக்கம்: ஆ. சுப்புசாமி

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு (World Confederation of Organizations of the Teaching Profession)

லாரன்ஸ் ஜே. பீட்டரின் புத்தகம்

கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக் கழகத்தில், உதவிப் பேராசிரியராகப் பணிபுரியும், லாரன்ஸ் ஜே. பீட்டர் அவர்கள் வரையறுக்கப்பட்ட கற்பித்தலின் நிகழ்ச்சி நிரல் (A Prescriptive Teaching Programme) என்னும் கட்டுரை ஒன்று எழுதி அதனைக் கல்வி நிறை காட்சி (Education Panorama) என்னும் பத்திரிக்கையில் வெளியிட்டுள்ளார். அது விதிவிலக்கான குழந்தையைப் (Exceptional Child) பற்றியதாகும். அதுவே வரையறுக்கப்பட்ட கற்பித்தல் என்னும் தலைப்புடன் புத்தகமாகவும் வெளிவந்துள்ளது.

இப்புத்தகத்தை அ. ஐ. நாட்டிலுள்ள மக்ரா-ஹில் கம்பெனியார் வெளியிட்டுள்ளனர்.

வினாத்தொகுதி

"விக்டாப்" ஆசிய வட்டார அலுவலகத்தின் இயக்குநர் E. W. பிராங்க்ளின் இந்தியாவிலுள்ள கல்வி வல்லுநர்களுக்கும், ஆசிரிய அமைப்புக்களுக்கும் வினாத்தொகுதி (questionnaire) ஒன்றை அனுப்பியுள்ளார். இது "விக்டாப்" மேற்கொள்ளும் முதல் தேசிய ஆராய்ச்சியாகும். இது தொடர்பான பணி இப்போது இந்தியாவில் நடந்து வருகிறது. இந்தியக் கல்வி யமைச்சகத்தின் ஆதரவோடும், அனைத்திந்திய ஆசிரியச் சங்கங்களின் கூட்டிணைப்பின் ஒத்துழைப்போடும் பிராங்க்ளின் இப்பணியை இந்தியாவில் நடத்தி வருகிறார். 18-மாதங்கள் வரை நடக்கவிருக்கும் இப்பணி 1967-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தான் முடிவெய்தும்.

ஆசிரியர்களின் பொதுத் தகுதிகள், தொழில் தகுதிகள், சேவைத் தனி நிலைமைகள் (Conditions of Service) பணி, பொருளாதார மதிப்பின் தனி நிலைமைகள், (Conditions of work, economic Status) தொழில் மதிப்பு. ஆசிரிய அமைப்புக்கள், பொது நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளச் சுதந்தரம் போன்ற செய்திகள் வினாத்தொகுதியில் அடங்கியுள்ளன.

மூன்று பரிசுகள்

யுனெஸ்கோவின், ஆசிரிய அமைப்புக்களின் தலைவர்களின், பயணப் பொருளுதவித் திட்டத்தின் கீழ் 1965-ஆம் ஆண்டில் மூன்று பரிசுகள் "விக்டாப்பிற்கு"

வழங்கப்பட்டுள்ளன. கானு, மலாகாசிக் குடியரசு, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளி லுள்ள கல்வி வல்லுநர்களுக்கு அப்பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

கானு தேசிய ஆசிரியச் சங்கத்தின் (Ghana National Association of Teachers) துணைப் பொதுச் செயலாளர், இங்கிலாந்து, கானடா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள ஆசிரியச் சங்கங்களைப் போய்ப் பார்வையிடுவார். மலாகாசிக் குடி

பசுடோலாந்திலும் தென்னுப்பிரிக்காவிலும் உள்ள ஆசிரிய அமைப்புக்களுக்கு "விக்டாப்" தலைவரின் வருகை

"விக்டாப்பின்" தலைவர் சர் ரோனல்ட் கௌல்ட் அவர்கள் அக்டோபர்த் திங்களில், தென்னுப்பிரிக்கக் குடியரசிற்கும், பசுடோலாந்திற்கும் வருகை தந்திருந்தார். அவ்வமயம் அவர் தென்னுப்பிரிக்காவிலுள்ள ஆப்பிரிக்க ஆசிரியர்ச் சங்கம், நேட்டால் இந்திய ஆசிரியர்ச் சங்கம், தென்னுப்பிரிக்க ஆசிரியர்ச் சங்கங்களின் கூட்டிணைப்பு, டிரான்ஸ்வால் ஆசிரியர்ச் சங்கம் முதலிய சங்கங்களைப் பார்வையிட்டார்.

சர் ரோனல்ட் கௌல்ட்

சர் ரோனல்ட் கௌல்ட் அவர்கள் தமது பயணத்தை முடித்துக் கொள்ளும் போது, இன ஒதுக்கல் கொள்கை காரணமாக வெல்ல முடியாத சிக்கல்கள் பல இருந்த போதிலும், ஆசிரியர்கள் தங்கள் பணியைச் செவ்வனே ஆற்றி வருகிறுர்கள் என்று குறிப்பிட்டார்.

"விக்டாப்பில்" அங்கம் வகிக்கும் நாடும், அடுத்த ஆண்டில் சுதந்திரம் அடையப் போகும் நாடுமான பசுடோலாந்தில், சர் ரோனல்ட் கௌல்ட் அவர்களின் வருகையை அந்நாட்டிலுள்ள ஆசிரியர்ச் சங்கத்தின் (Lesotho African National Teachers' Association) அலுவலர்களும், அமைச்சக அலுவலர்களும் விழாவாகக் கொண்டாடினர். அன்றிரவு அவர் பசுடோலாந்து, சுவாசிலாந்து, பெக்குவானுலாந்து பல்கலைக் கழக முதல்வரின் விருந்தினராக இருந்தார்.

யரசிலுள்ள ஆசிரிய அமைப்பின் (தலைவரான ராபர்ட் ராலி ரவாக்கா, பெல்ஜியம், பிரான்சு, சுவிட்சர்லாந்து, இஸ்ரேல் ஆகிய நாடுகளிலுள்ள, விக்டாப்பில் அங்கம் வகிக்கும் சங்கங்களைப் போய்ப் பார்ப்பார்.

பிலிப்பைன் பொதுப் பள்ளிக்கூட ஆசிரியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சாண்டோஸ் பஸ்குவால், மெக்சிகோவிலுள்ள ஆசிரியச் சங்கத்தையும், "விக்டாப்" செயலகத்தையும், பியூபெரிட்டோ ரிகோ ஆசிரியச் சங்கத்தையும் பார்வையிடச் செல்லுவார்.

யுனெஸ்கோ, ஆசிரிய அமைப்புக்களிலுள்ள தலைவர்களுக்குப், பயணப் பொருளுதவிசெய்வதன் நோக்கங்கள் கீழ்வருமாறு :

1. ஆசிரிய அமைப்புக்களின் அமைப்பையும், நடவடிக்கைகளையும் ஆராய்தல். (கல்வி தொடர்பான வெளியீடுகள், தொடக்க நிலைப் பயிற்சி, சேவையிலிருக்கும்போதே பயிற்சி, வளரும் கல்விக் கோட்பாடுகளில் பங்குகொள்ளுதல் ஆகியவற்றின் மீது தனிக் கவனம் செலுத்துதல்).

2. வெவ்வேறு நாடுகளிலுள்ள சங்கங்களுடன்—அவற்றின் சட்டதிட்டங்கள் எந்த அளவிற்கு அனுமதிக்கின்றனவோ அந்த அளவிற்குத் தொழில் தொடர்பான உறவை அதிகரித்துக்கொள்ளுதல்.

3. போய்ப் பார்க்கும் நாடுகளிலுள்ள சங்கங்களைப் பற்றிய முதல் தரமான செய்திகளையும் கற்பித்தலிலுள்ள பிரச்சினைகளையும் தெரிந்துகொள்ளுதல்.

ஆப்பிரிக்காவிற்கு ஆசிரியர்கள்

"ஆப்பிரிக்காவிற்கு ஆசிரியர்கள்" (Teachers for Africa) என்னும் ஏட்டினை

"விக்டாப்" தலைமைச் செயலாளரின் அக்கறை

டோமினிகன் குடியரசிலுள்ள ஆசிரிய அமைப்புக்களுக்கு விக்டாப் எவ்வெவ்வாறெல்லாம் உதவி செய்யலாம் என்பது பற்றி அவ்வமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேச, "விக்டாப்" தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் அவர்கள் அக்டோபர்த் திங்களில் அக்குடியரசிற்கு வருகை தந்திருந்தார். பொதுவாக உலகம் முழுவதிலும், குறிப்பாக மேற்குறித்த குடியரசிலும் ஆசிரியத் தொழிலின் தனி நிலைமைகளிலுள்ள இக்கட்டுக்கள் குறித்து அவர் அக்கரை தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலாளர் அவர்கள் குடியரசில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தபோது, பெனுமாவின் (விக்டாப்புடன் இணைக்கப்பட்டுள்ள சங்கம்) அலுவலர்களுடனும், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தலைமைக் கல்வி மேற்பார்வையாளருடனும் (Rector) பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் சங்கத் தலைவருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.



டாக்டர் கார் அவர்கள் அமெரிக்கா திரும்பியதும் அமெரிக்க அரசின் இலாகாவிற்கு (U. S. State Department) டோமினிகன் குடியரசிலுள்ள பள்ளிகளில் தங்கியுள்ள அமெரிக்கப் படைகள் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் வெளியேற வேண்டும் என்றும், அப்போதுதான், அப்பள்ளிகள் திறக்கும்போது குழந்தைகளால் கல்வி பயிலுதற்கு இயலும் என்றும் மடல் ஒன்று வரைந்துள்ளார். உடனே அமெரிக்க அரசு இனிப் பழையபடியே பள்ளிகள் பணிபுரியும் என்னும் உறுதிமொழியடங்கிய மாற்றஞ்சலை டாக்டர் கார் அவர்களுக்கு விடுத்தது. உள்நாட்டுப் போரின் போது பீரங்கியால் தாக்கப்பட்ட பள்ளிக் கட்டடம் ஒன்றில், டாக்டர் கார் அவர்கள் பெனுமாவின் தலைவர் பெர்னண்டோ ஹெர்னண்டெஸ் டயாஸ் அவர்களுடனும், அமெரிக்க நாடுகளின் "விக்டாப்" அறிஞர் அரங்க நிகழ்ச்சியின் இயக்குநர் ஜோஸ் ஜோக்வின் ரிவேரா அவர்களுடனும் நின்று கொண்டிருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

இவ்வாண்டு, ஜூன் மாதம் யுனெஸ்கோ வெளியிட்டுள்ளது. இவ்வேடு கடல் கடந்த நாடுகளில் கற்பித்தல் (Teaching Abroad) என்னும் திட்டத்தின்கீழ் வெளியிடப் பட்டுள்ள தொடர் வரிசை ஏடுகளில் நான்காம் ஏடாகும். இதனை வெளியிட்டதன் முக்கிய நோக்கம் ஆப்பிரிக்க நாடுகளில் இடைத்தர, மேல்- இடைத்தர, உயர்தரப் பள்ளிகளில் அயல்நாட்டு ஆசிரியர்களை நியமிப்பதே யாகும்.

103—பக்கங்கள் கொண்ட இவ்வேடு ஆங்கிலத்திலும், பிரஞ்சு மொழியிலும் வெளியிடப்பட்டுள்ளது; இரண்டு முக்கியப் பகுதிகளைக் கொண்டுள்ளது; அவை 1. அயல்நாட்டு ஆசிரியர்களை வேலைக்கமர்த்துதலில் அக்கரை காட்டும் தேசியச் செயலாண்மை நிலையங்கள். 2. 1965-66-ஆம் கல்வியாண்டில் காலியாக உள்ள வேலைகள். இரண்டாம் பிரிவினை முற்ற முடிந்த பட்டியலாகக் கொள்ளக்கூடாது என்று முன்னுரையில் குறிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் (ஆப்பிரிக்காவிற்கு ஆசிரியர்கள்) பெற விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

UNESCO,
Place de Fontenoy,
Paris 7e, France.

குடியரசு நாடான சாம்பியாவின் கல்வியமைச்சர் ஜான் மிவானு காட்வி "விக்டாப்" தலைமையகத்திற்கு வருகை தந்திருந்தார். அங்குப் பணியும் மேல் நிலை ஊழியர்களுடன் அவர் உரையாடினார். "விக்டாப்" நூலகத்தில அமைச்சரவர்கள் இருப்பதை படத்திற் காண லாம்.

அப்போது வடக்கு ரொடீஷியாவாக இருந்த பகுதியில், முதன் முதலில் கல்வி அலுவலர்களாக நியமிக்கப்பட்ட அலுவலர்களில் ஒருவராவர் மிவானு காட்வி அவர்கள். கல்வித்துறையில் பல்லாண்டுக்கால அனுபவத்துடன் தான் அவர் அமைச்சராயுள்ளார்.

இக்கல்வியமைச்சர் தமது நாட்டில் ஆசிரியச் சங்கத்தை நிறுவியவரும் அதன் முன்னாள் தலைவருமாவார். கல்வி யமைச்சகத்தில் பணிபுரியும் ஜோசப் மிவெம்பா இவ் வமைச்சரின் நிரந்தரச் செயலாளர் ஆவார்.



விளக்கப் படங்கள்

பன்னாட்டு ஒத்துழைப்பாண்டுத் திட்டத்தின் விளைவாக (International cooperation year Programme) ஐ. நா. அமைப்பு, அதன் பணிகளை விளக்கும் விதத்தில், பதினாறு விளக்கப் படங்களைத் தயாரித்துள்ளது.

பொதுப் பேரவை அமர்வின் (General Assembly Session) புகைப்படம்.

ஐ. நா. அமைப்பின் உரிமைப் பத்திரத்தில் கையெழுத்திடுதல், கானு, கோஸ்ட்டாரிகா, பிரேசில், ஹொண்டுராய், பாக்கிஸ்தான், தென்ருசியா, உருசியா, ஐ. அ. குடியரசு, கேமரூன், கொரியா, நீலநதிப் பள்ளத்தாக்கு (The Nilevalley), சியர்ரா லியோனி, ஈரான் ஆகிய இடங்களில் ஐ. நா. அமைப்பின் பணிகளை விளக்கும் புகைப்பட விளக்கங்கள் ஆகிய இவை மேற்கூறிய விளக்கப் படங்களுள் அடங்கும். இவ்விளக்கப் படங்களின் படிகள் எல்லா ஐ. நா. அமைப்புச் செய்தி நிலையங்களிலும் (U. N. Information centre) கிடைக்கும்:

விக்டாப்பிற்குக் கிடைத்த செய்தி

நான்மொழி ஆசிரிய ஒன்றிப்புக்களின் (Four Language Teacher's Unions)

அறிவியல், ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களின் கற்பித்தல் தரத்தை உயர்த்தும் நோக்குடன் ஆப்பிரிக்காவிலுள்ள உகாண்டா, கென்யா, ரொடீஷியா ஆகிய நாடுகளுக்குக் கோடையில், கனடாவைச் சேர்ந்த 25-ஆசிரியர்கள் சென்றிருந்தனர். அவர்கள் தங்கள் பணியைச் செவ்வனே முடித்துக் கொண்டு செப்டம்பர்த் திங்களில் தங்கள் தங்கள் பள்ளிகளுக்குத் திரும்பினர்.

உலக நாடுகள் ஒன்றை ஒன்று புரிந்து கொள்ளும் திட்டமான 1965-ஆம் அண்டைய ஆப



பிரிக்கத் திட்டத்தில் இவ்வாசிரியர்கள் பங்கு கொண்டனர். இவர்கள் ஆப்பிரிக்க ஆசிரியர்கள் தங்கள் தகுதியினை உயர்த்திக் கொள்ளும் விதத்தில் பணிபுரிந்தனர்.

கனடாவைச் சேர்ந்த இவ்வாசிரியர்கள் ஊதியமின்றி உழைத்தனர். இவர்களுக்கான செலவு முழுவதையும் உள்நாட்டுச் சங்கங்களும், கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பும் ஏற்றுக்கொண்டன.

ஜூலை மாதத்தில், ஒட்டாவாவிலுள்ள கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பின், தலைமையகத்தில் நடத்தப்பட்ட ஒழுங்கமை பயிற்சிக்குத் தொண்டர்கள் வந்திருந்தனர். ஒழுங்கமை பயிற்சி வகுப்பில் விரிவுரையாற்றியவர்களில், ரேமாண்ட் ஜெஸ்மைக்கும் ("விக்டாப்பைச் " சேர்ந்த ஆப்பிரிக்கத் தனிச் சிறப்பு உதவியாளர்) ஒருவராவார். கனடியன் ஆசிரியக் கூட்டிணைப்பின் தலைமையகத்தில, தொண்டர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். முதல் வரிசையில் வலமிருந்து இடமாகப் பார்த்தால் 4-ஆவதாக நிற்பவர் திருவாளர் கே. ஸ்மைக் ஆவார்.

பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு குழு சிங்கப்பூரில் அமைக்கப்படும் என்று "விக்டாப் பிற்குச்" செய்தி கிடைத்துள்ளது. இக்குழு அமைப்பதின் நோக்கம் ஒன்றிப்புக் களுக்கெல்லாம் பேரொன்றிப்பான கூட்டிணைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான சட்டதிட்டங்களை வகுத்திடுவதற்கேயாகும். இதில் ஈடுபட்டுள்ள நான்கு ஒன்றிப்புக் களில் மூன்று ஒன்றிப்புக்கள் "விக்டாப்பில்" அங்கம் வகிக்கும் சங்கங்களாகும்.

செயலறிக்கை

யுனெஸ்கோவைச் சேர்ந்த பணிக் குழு ஒன்று, அறியாமையை அகற்ற அரசு சாரா அமைப்புக்கள் எவ்வெவ்வாறெல்லாம் பணிபுரியலாம் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்தும் செயலறிக்கை ஒன்றினைத் தயாரித்துள்ளது. "விக்டாப்" பாரீஸ் அலுவலகத்தின் இயக்குநரான வில்ஹெல்ம் ஈபர்ட் இப்பணிக்குழுவின் தலைவ ராவார்.

Magisterio Panameño Unido இது பனமாவிலுள்ள ஆசிரியச் சங்கமாகும்; "விக்டாப்பிலும் அங்கம் வகிக் கிறது. இச்சங்கம் El Educador என்னும் பத்திரிகை ஒன்றினை இபபோது வெளியிடுகிறது. இப்பத்திரிக்கை யின் முதல் வெளியீட்டின் படியொன்று "விக்டாப்" செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனையே படத்தில் பார்க்கிறீர்கள்.



தனிக்குழுக்களுக்கு அறியாமையை அகற்றும் வகுப்புக்கள் ஏற்பாடு செய்தல், ஆசிரியத் தொழிலுக்கு ஆட்சேர்த்தல், பயிற்சி அளித்தல், ஆசிரியர்கட்குப் பயன்படும் பயிற்சித் துணைப் பொருட்கள் தயாரித்தல், வகுப்புத் துணைப் பொருட்கள் தயா ரித்தல், அவற்றை இடம் பொருள் ஏவலுக்கேற்ப மாற்றி யமைத்துக்கொள்ளுதல்; அறியாமையை அகற்றும் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்திட ஏற்பாடு செய்தல் ஆகிய இத்துறைகளில் அரசுசாரா அமைப்புக்களின் பணி மிக மிக இன்றியமையாத தாகும். புதிதாக எழுத்தறிவு பெற்றுள்ள மக்களுக்குப் பயன்படுத்தும் விதத்தில், அரசுசாரா அமைப்புக்கள், படித்தற் கேற்ற பொருள்கள், திரைப்படங்கள், வானொலி நிகழ்ச்சிகள், தொலைநோக்கி நிகழ்ச்சிகள் மற்றுமுள்ள காண்டற்—கேட்டல் பொருள் கள் முதலியவற்றைத் தயாரிக்கலாம் என்று மேற்கூறிய செயலறிக்கை கூறிகிறது.

"உலக எழுத்தறிவு பரப்புதிட்டத்தில் அரசுசாரா அமைப்புக்களின் ஒத் துழைப்பு : செயலில் இறங்கிடச் சில யோசனைகள்" என்ற தலைப்பிட்ட செயலறிக்கை யைப் பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

WCOTP PARIS OFFICE,
54, rue de Varenne,
Paris 7e, France.

மூன்றுவது "விக்டாப்" ஆசியத் தலைமைப் பயிற்சி அறிஞர் அரங்கம்

"விக்டாப்" ஆசியக் குழுவின் பரிந்துரையின் மீது, அடுத்த ஆண்டு அக்டோபர் மாதத்திலோ நவம்பர் மாதத்திலோ மூன்றுவது "விக்டாப்" ஆசியத் தலைமைப் பயிற்சி அறிஞர் அரங்கம் (Third WCOTP Asian Leadership Training Seminar) ஒன்று நடக்க இருக்கிறது. அவ்வறிஞர் அரங்கத்தின் பொருள் ஆசிய அமைப்பின் நட வடிக்கைகளுக்கு நிதியுதவி அளித்தல் (Financing Teacher organization Activities) என்பதாகும்

இம்மாநாட்டின் தற்காலிகத் திட்டங்களை அறிவிக்கும் மடலொன்று தலைமைச் செயலாளர் வில்லியம் ஜி. கார் அவர்களால் வரையப்பட்டு, "விக்டாப்பின்" ஆசிய உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஒரு வாரத்திற்கு நடைபெறும் இம்மாநாடு முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.

1 ஆராய்ச்சி, உடன்படிக்கை ஏற்பாடு, பொதுமக்கள் தொடர்பு, சட்டச் சேவைகள் மாநாடுகள், வெளியீடுகள், ஊழியர்கள் போன்ற அமைப்புத் தொடர்பான, ஒழுங்குமுறைக்குட்பட்ட நடவடிக்கைகள்.

2. நிதி திரட்டுதல், கணக்குக் காட்டுதல்.

கடன்களின் அளவையும், ஆண்டுக் கடன்களுக்கும், வாழ்க்கைக் கடன்களுக் கும் இடையிலுள்ள தொடர்பினையும் தீர்மானித்தல்.

3. காப்புறுதித்தொகை, (Insurance) இறப்பிற்குப்பின் அடையும் பயன்கள், (Death Benefits) உதவிச் சம்பளத்திட்டங்கள், (Scholarship Plans) நாணயச் சங்கங் கள், (Credit Unions) வீடுகட்டும் திட்டங்கள் போன்ற ஊழியங்கள்.

"விக்டாப்" ஆசிய அமைப்புக்களின் ஊழியங்களைப் பற்றியும், நிகழ்காலத் திட்டங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள டாக்டர் காரின் மடலுடன் வினத்தொகுதி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

★